DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.62/2025**

Deposition of Witness : PW-1.

| | | | |
|---|---|---|---|
| Name : | முத்துகுமார். | Father's Name : | |
| Village : | | Taluk : | |
| Caste : | | Calling : | |
| Religion : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 20.08.2026

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 02.47 பி.ப

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான், அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். நான் என் தரப்பில் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அந்த ஆவணங்கள் **ம.சா.ஆ–1** முதல் **ம.சா.ஆ–18** வரை குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை

நான் திருவனந்தபுரம், கேரோளவில் பலாபழம் லோடு ஏற்றும் கம்பெனியில் மேலாளராக பணி செய்து வருகிறேன். தற்பொழுது மாதம் சம்பளம் எவ்வளவு வாங்குகிறேன் என்றால் ரூ.25,000/–. ஆனால், விபத்திற்கு பிறகு வேலைக்கு செல்லவில்லை. விபத்து எவ்வாறு நடந்தது என்று எனக்கு ஞாபகம் இருக்கிறது. எனக்கு விபத்திற்கு முன்போ பின்போ வலிப்பு நோய் வந்ததா என்றால் இல்லை. விபத்தின்போது நான் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் எனது தம்பியுடையது. எனக்கு இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது என்று சாட்சி தனது இருசக்கர



JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.20 18:12:45 +0530

வாகன ஓட்டுநர் உரிமத்தை காட்ட அதை நீதிமன்றத்தால் கண்ணுற்றப்பட்டது. விபத்து போடியில் முந்தல் ரோடு அருகில் உள்ள புதூரில் ஏற்பட்டது. அந்த சாலை மலைப்பாதை என்றால் சரிதான். அந்த இடம் மூன்று சாலை சந்திக்கும் இடம் என்றால் சரிதான். அந்த இடத்தில் DSP அலுவலகம், செக்போஸ்ட் உள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் செக்போஸ்ட் இருப்பதால் வாகனங்கள் அனைத்தும் மெதுவாகதான் வரும் என்றால் சரியல்ல, வந்தவர் வேமாகதான் வந்தார். என்னை இடித்த இனோவா கார் எனக்கு எதிர் திசையில் வந்தது. அந்த சாலை கிழமேல் சாலை என்றால் சரிதான். விபத்து கிழமேல் சாலையின் மையப்பகுதியில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்தபொழுது இரவு 07.15 மணியிருக்கும். எதிரே வந்த வாகனம் முகப்பு விளக்கு ஒளிர விட்டு வந்தது என்றால் சரிதான். எனவே, அந்த வண்டி வருவதை நான் 300 மீட்டர் முன்பே பார்த்திருக்க வேண்டும் என்றால் வாய்ப்புள்ளது. நான் தெற்கிலிருந்து வடக்கு இருசக்கர வாகனத்தை திருப்பும்பொழுதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் சாலையில் வாகனங்கள் வருவதை கவனிக்காமல் தெற்கிலிருந்து வடக்கு பக்கமாக திடீரென வாகனத்தை திருப்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்த முனீஸ்வரி யார் என்றால் என் மனைவி ஆவார். முனீஸ்வரி விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல பார்த்தார்கள். விபத்து ஏற்பட்டு ஒரு வருடம் கழித்து இறந்துவிட்டார்கள். என் மனைவி விபத்தை பார்க்கவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு இரண்டு மகன்கள். அவர்களுக்கு 16 மற்றும் 13 வயது ஆகும். விபத்திற்கு எனது கவனக்குறைவுதான் என்றால் சரிதான். இனோவா காரின் ஓட்டுநர் சாலை விதிகளை பின்பற்றி இடது பக்கமாக வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு வலது தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 மற்றும் ம.சா.ஆ.8 ஆவணத்தின் படி எனக்கு வலது தோள்பட்டையில் எந்த எலும்பு முறிவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்து காயங்களினால் எனக்கு எந்த நிரந்தர ஊனமும் ஏற்படவில்லை என்றும் எனக்கு தற்பொழுதும் நல்ல ஞாபக சக்தி உள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. முதலில் போடி அரசு மருத்துவமனயிலும், தேனி க.விலக்கு அரசு மருத்துவமனையிலும் மதுரை அப்பலோ மருத்துவமனையிலும் விபத்து காயங்களுக்கு சிகிச்சை பெற்றேன். நான் போடி மற்றும் தேனி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை


JAYASUDHA T S P
Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.20 18:12:49 +0530

என்றால் தெரியவில்லை. அப்பலோ மருத்துவமனையில் முதல்கட்டமாக 13 நாட்களும் அதன் பிறகு 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ.14 வரை உள்ள மருத்துவ இரசீதுகளில் உள்ள முன் வைப்பு தொகையினை கழித்து கொண்டுதான் மருத்துவ செலவீனங்கள் கணக்கிட முடியும் என்றால் சரிதான். ம.சா.ஆ.15 ஆம்புலன்ஸ் கார் வாடகை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த இரசீதுகள் வரிசை எண் தொடர்ந்து அமைந்துள்ளதால் அவை வழக்கிற்காக தயாரிக்கப்பட்டது என்று நன்கு தெரிய வருகிறது என்றால் சரியல்ல. நான் ஒவ்வொரு முறையும் மருத்துவமனைக்கு போகும்பொழுது ஒரே வாகனத்தில்தான் செல்வேன். பல்வேறு தலைப்புகளில் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகப்படியானது என்றும் அவை எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல. நான் ஓட்டிச் சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டு நிறுவனத்தை தகுந்த தரப்பினராக சேர்க்காததால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. விபத்து எனது கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளதால் எனது வாகனத்தின் காப்பீடு நிறுவனம்தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 03.12 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

JAYASUDHA T S P

Digitally signed by JAYASUDHA T S P
Date: 2026.08.20 18:12:53 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 20.08.2026